[...]Y OF JAFFNA, SRI LANKA

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 23 ரபி-அவ். 14 இதழ் 296
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-12-84

## தமிழக மீனவரை பாதுகாக்க
# இந்திய கடற்படைக் கப்பல் இராமேஸ்வரம் விரைகிறது!

[சென்னை]

இராமேஸ்வரம் கடல்பகுதியில் தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுவதனை தடுப்பதற்காக இந்தியா கடற்படைப் பாதுகாப்புக் கப்பல் ஒன்றை அவசரமாக சென்னையிலிருந்து இராமேஸ்வரம் கடல்பகுதிக்கு அனுப்பியுள்ளது.

அத்துடன் பல கடற்படை மீட்புப் படகுகளும் இப்பகுதிக்கு விரைந்துள்ளன.

நேற்று தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் இப்பிரச்னை தொடர்பாக மாநாடொன்று நடைபெற்றது. கடற்படை, பாதுகாப்புப் படை, கப்பல் படையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

தமிழக மீனவர்கள் இப்பகுதியில் தாக்கப்படுவதனை முற்றாகத் தடுப்பதற்காக தீவிர கடல் பந்தோபஸ்து நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும், அவர்களின் பாதுகாப்புக்கு சகல விதமான நடவடிக்கைகளையும் எடுப்பதென்றும் இம்மாநாட்

(4ம் பக்கம் ம்கலம் பார்க்க)

# வடபகுதி பஸ் சேவை ஸ்தம்பிக்கும் ஆபத்து!

## டீசல் இல்லை; பஸ் சேவை இன்று நடக்குமா?

(யாழ்ப்பாணம்)

**வட பகுதி பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் பஸ் சேவை நின்றுவிடக் கூடிய ஆபத்து உருவாகியுள்ளது.**

எதிர்பார்த்த டீசல் வடபகுதிப் போக்குவரத்துச் சேவை டிப்போவுக்கு வந்து சேராததாலே இவ்விக பிரச்னையொன்றை வடக்கு பஸ்சேவை எதிர்நோக்குகிறது.

நான்கு 'பவுசர்'களில் யாழ்ப்பாண பஸ் டிப்போவுக்கு வந்து கொண்டிருந்த 4,800 கலன் டீசல் வந்துசேரவில்லை.

கிளிநொச்சி பெற்ரோலியம் கூட்டுத்தாபன டிப்போவில் இருந்து இந்த நான்கு 'பவுசர்'களும் புறப்பட்டன. ஒவ்வொரு 'பவுசரி'லும் 1,200 கலன் டீசல் கொள்கலன்களில் இருந்தன. இந்த டீசலைக் கொண்டு வந்த 'பவுசர்'கள் காணமல் போனது மர்மமாகவுள்ளது.

நேற்று வரை உள்ள

(4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## வாகன அனுமதி பற்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள சட்ட விதிகளுக்கு அமைய வாகன உரிமையாளர் பெற வேண்டிய வா[க]னம் வைத்திருப்பதற்கான அதிகாரம்அளிக்கும் பத்திரம் தொடர்பான கூட்டமொன்றை யாழ். அர

(4ம்பக்கப 5ம்கலம்பார்க்க)

## இன்று ஆரம்பம்

(கொழும்பு)

க. பொ த (சாதாரண) பரீட்சை இன்று தொடங்கிறது. 4,65.478 பேர் பரீட்சையில் தோற்றுகிறார்கள்.

## பஸ்கள், லொறிகளில் ஆயிரம் பிரயாணிகள் யாழ்ப்பாணம் வந்தனர்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் கொடிகாமத்துக்கு அப்பால் வைத்து திருப்பிவிடப்பட்ட போதிலும், அவை அல்லாகை ஊடாக சாவகச்சேரிக்கு வந்து சேர்ந்தன. பின்னர் யாழ்ப்பாணம் வந்தடைந்தன. மிகவும் கஷ்டமான சூழ்நிலை

[4ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## விமான தாமத்தின் விளைவு:
# நீர்கொழும்பு புளூலகூன் 'முற்றுகை!'
### 60 தமிழக வியாபாரிகள் ஆபத்தின்றித்தப்பினர்!!

[கொழும்பு]

நீர்கொழும்பு 'புளூலகூன்' உல்லாச ஹோட்டல் நேற்று முன்தினம் பெரும் பயமுறுத்தலுக்குள்ளானது.

இந்த ஹோட்டலில் தமிழ்த் தீவிரவாதிகள் தங்கியுள்ளார்கள் என்ற வதந்தி நீர்கொழும்புப் பகுதியில் பரவியிருந்தது. இதனையடுத்து நூற்றுக்கணக்கானவர்கள் இந்தக் ஹோட்டலைச் சூழ்ந்து கொண்டு இதனைத் தாக்குவதற்குத் தயாரானார்கள்.

இவ்வேளை பொலிஸ் ஸ்தலத்துக்கு வந்து ஹோட்டலில்

4ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## உணவு விநியோகத்துக்கு அரச அதிபர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் நிலவும் உணவுப் பொருள் தேவையை சமாளிக்கவும், உணவுப் பொருட்களினதும் ஏனைய அத்தியாவசியதேவைப் பொருட்களின் விநியோகத்தை உறுதிப்படுத்தவும் உடனடி நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் மேற்கொண்டு வருகிறார்

இதற்கான முதல் நடவடிக்கையாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வாகனங்களுக்கு

(4ம் பக்கம் 4ம் கலம் பாாகக)

## பளையில் துப்பாக்கிப்பிரயோகம்

[யாழ்ப்பாணம்]

பளைப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று துப்பாக்கிப் பிரயோகம்செய்ததாகவும் இதில் சிலர் காயமடைந்திருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து பளை, கொடிகாமம், எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவத்தினர் நடமாட்டம் பெருமள

[4ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## 'அமிர்' இலங்கை வருகிறார்

[யாழ்ப்பாணம்]

தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் இம் மாதம் 10ம் திகதி கொழும்பு திரும்பவுள்ளார்

சர்வகட்சி மாநாடு இம் மாதம் 14ம் திகதி நடைபெறவுள்ளது தெரிந்ததே (ம )

# கடந்த 48 மணி நேரத்தில் 1000 தமிழ் இளைஞர்கள் கைது!

[கொழும்பு]

கடந்த 48 மணி நேரத்தில் கொழும்பில் பரவலாக ஆயிரம் தமிழ் வாலிபர்கள் கைதானார்கள்.

இவர்களில் பெரும் பகுதியினர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் 160 பேர் மட்டுமே தொடர்ந்து காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான, மற்றும் கொழும்பு நகருக்குப் புதியவர்களான தமிழ் வாலிபர்களே கைதானவர்களில் கூடுதலானவர்களாவர்

தமது ஆள் அடையாளங்களைத் தகுந்த வகையில் நிரூபித்தவர்களும், கொழும்பில் தங்கியிருப்பதற்கான காரணங்களைத் தெளிவாகச் சமர்ப்பித்தவர்களுமே விடுதலையாக்கப் பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

பல பகுதிகளில் தமிழ் வாலி

(4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் மாஅதிபர் திரு. உருத்திரராஜசிங்கம் 1985 ஜனவரி முதல் ஓய்வுபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

பொலிஸ்மா அதிபராக திரு. ஹேபர்ட் வீரசிங்கா நியமிக்கப்படவுள்ளார் என்றும் அறியப்படுகிறது (மா)

## கிராமப்புற பஸ் சேவை திடீர் ரத்து!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த பஸ் ஒன்று புத்துவெட்டுவான் நோக்கிச் சென்றபோது, கொக்காவில் சந்தியில் வைத்து ஆண் பிரயாணிகளுடன் ஆயுதப் படையினரால் கடந்த புதன்கிழமை எடுத்துச் செல்லப்பட்டது.

இப்பஸ்ஸில் பயணம் செய்த பெண் பிரயாணிகளை இறக்கிவிட்டு, சுமார் 15 ஆண் பிரயாணிகளுடன் இந்த பஸ்ஸை ஆயுதப் படையினர் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்த ஆண்பிரயாணிகளுக்கு

(4ம் பக்கம் 3ம் கலம் பார்க்ச)

## வெளிவாரி பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அவசர தந்தி

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 10-ம் திகதி நடைபெறவுள்ள கலை [illegible] ஞான வெளிவாரி பட்ட[illegible] பரீட்சைக்கு தோற்றும்

(4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## அமெரிக்க யூனியன் காபைட் கம்பனியின் தலைவர் அன்டசன் பம்பாயில் கைது

(புதுடில்லி)

இந்தியா வந்துள்ள அமெரிக்க பல்தேசிய கம்பனியான யூனியன் காபைட் கம்பனியின் தலைவர் திரு வோறன்ட் அன்டசன் போபாலில் வைத்துக்

[4ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## பட்டுநகரில் இளைஞர் சுடப்பட்டு மரணம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை புகை[யி]ரத நிலையப் பகுதியில் தண்டவாளத்துக்கு அருகாமையில் இளைஞர் ஒருவர் சுடபபட்டு இறந்து கிடந்தார்.

மட்டக்களப்பு பேத்தாளை [illegible] இரன் (30 வயது) என்ற நபரே இவ்வாறு இறந்தவராவார்.

இவர் நேற்று முன் தினம் இரவு ஆயுதம்தாங்கிய இளைஞர்களினால் கூட்டிச் செல்லப்பட்டு சுடப்பட்டதாகக் கூறப்படுகிறது

இவர் பல கொள்ளைகள், கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது இவரது மரண விசாரணையில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது (சூ)

## 'இன்ரசிற்றி' யாழ். வந்தது

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட 'இன்ரசிற்றி' ரயில் நண்பகல் 12-50 மணியளவில் யாழ் புகையிரத நிலையத்தை வந்து சேர்ந்தது. அடுத்து 1-4 மணிக்கு அது கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. [மா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Bairha Farm Hisex முட்டையிடும் ஏழு மாதக் கோழிகள் விற்பனைக்குண்டு. அ. குலநாயகம், இந்துக் கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு.
965

## தவறிவிட்டது

கோண்டாவிலைச் சேர்ந்த கனகலிங்கம் சுப்பிரமணியம் என்பவரின் அடையாள அட்டை (இல 522592811V) தவறிவிட்டது. கண்டவர்கள் அம்மன் கோவிலடி, கோண்டாவிலில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். 967

## வகுப்புகள்

வைகாசி 1986 London Engineering Council part I [A/L இரு விஞ்ஞான சித்திகள்] part II [B. Sc Engineering சமன்] City and Guilds Electrical, Quantity Surveying, Draughtsman ship [ஆறு மாத அட்வான்ஸ், ஒரு வருட தொடங்கினர் பயிற்சிகள்]; மூன்று வருட B. Sc. Computer Science பரீட்சைகளுக்கான முழு நேர வார [Course work உட்பட] வார இறுதி வகுப்புகள் தை 1985 திறமை, அனுபவ சாட்டட் பொறியியல் விரிவுரையாளர்களையும் வருடா வருடம் சிறந்த பெறுபேறுகளையும், இலண்டனல் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனமாகிய Jast ஆல் 31-12-1984 முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 963


# Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- ✶ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- ✶ T. V. மேசை,
- ★ தண்ணீர்த் தாங்கி,
- ★ WASH BASIN,
- ★ TEAPOYS, ★ CENTRE TABLE,
- ★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

# TRADE CENTRE,

ஹோம் பினன்ஸ் லிமிட்.,

155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


## ஓராண்டு நினைவஞ்சலி
## Mr. RICHIEMANN



அவர் ஆண்டவனின் முகத்தைக் கண்டார்.

அவரது பிரிவால் துயருற்று நினைவு கூரும்

அன்பு
மனைவியும்
பிள்ளைகளும்.

உடுவில்.

(944)


UNIQUE COMMUNICATION SERVICE

# யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

## 24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுககு அனமையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்:- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066


## கைவிரிப்பு

(சுண்டிக்குளி)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அப்பகுதிக்குட்பட்ட தனிப்பட்ட கடைக்காரர்களுக்கு இதுவரை காலமும் போதியளவு மா, சீனி, அரிசி முதலியவற்றை வழங்கி வந்தது, ஆனால் தற்போது போதியளவு சாமான்கள் கையிருப்பில் இருந்தும் வழமையாக சாமான் எடுக்கும் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு வழங்க முடியாது என்று தெரிவிககப்படுகிறது வேறு ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் இந்த வர்த்தகர்கள் சில பொருட்களைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் சுமார் 12 ஆயிரம் ரூபாவை கொள்ளை அடிக்கப்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு எதிரொலி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டநேரத்தில் வீதிகளில் நடமாடுபவர்கள் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும், துப்பாக்குச் சூட்டுக்கும் இலக்காகியும் வருகிறார்கள்.

கவசவண்டிகள் சகிதம் ரோந்து புரியும் இராணுவத்தினர், பாதுகாப்பான இடங்களில் வாகனங்களை நிறுத்தி விட்டு, கிராம நகர்-பட்டினப் பகுதிகளின் உள்வீதிகளில் நடந்து செல்லும் பொழுதே பொது மக்களில் பலர் இன்னலுக்குள்ளாகின்றனர்.

இராணுவத்தினரின் ரோந்து சேவைக்கு ஹெலிகொப்டர்கள் மேலே பறந்து சென்று பொது மக்களின் நடமாட்டங்களைத் தெரியப்படுத்துவதாகவும் கூறப்பட்டது.

## 10–ல் கூடி ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 85-ம் ஆண்டு ஆங்கில கல்வி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் பாதுகாப்பு நிலை குறித்து இம்மாதம் 10-ம் திகதி காலை 10 மணிக்குக் கூடி ஆலோசனை நடத்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வளவில் இவ்வாலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## ஆரம்பம் ஜனவரி 3-ல்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 16-ந் திகதி பேராதனை பல்கலைக்கழகம் செல்லவிருந்த யாழ். மாணவர்கள் ஜனவரி 3-ந் திகதி செல்லலாமென மேற்படி பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

16-ம் திகதி இம்மாணவர்கள் செல்லுவதிலுள்ள நடைமுறைப் பிரச்னைகள் சம்பந்தமாக யாழ். பிரஜைகள் குழுவினர் உபவேந்தருடன் நடத்திய பேச்சுவார்த்தை மூலம் இத்திகதி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## கைதாகி விடுதலை

(பண்டத்தரிப்பு)

பிரான்சிலிருந்து தமது சொந்த ஊரான மாதகலுக்கு வரும்போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட எஸ். பாலசுப்பிரமணியம் என்ற இளைஞர் மூன்று தினங்களின்பின்பு விடுதலை செய்யப்பட்டார். மாதகலைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினாலேயே இவர் கைதுசெய்து விசாரிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## 10ம் திகதிவரை சீசன் டிக்கட்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கான வ. பி. போ. வ. சபை பஸ்களுக்கான பருவகாலச்சீட்டு வழங்குவது இம்மாதம் 10-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி இந்த நடவடிக்கை எடுத்ததாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (மா)


# கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை




உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்தி எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.
10 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி
அன்னை இந்திராவின் அழகிய ஸ்ரிக்கர்
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி
## கதிரம்பிள்ளை குமாரவேலு

மலர்வு : 7-7-1908 உதிர்வு : 19-11-1983

அன்புத்தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியானாலும் என்றும் எங்களுடன் இருப்பதாகவே நாங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். 968

## மரண அறிவித்தல்
## கதிரவேலு ஆறுமுகம்

[அரசாங்க ஒப்பந்தகாரர்]

காரைநகர் களபூமி சத்திரந்தை இருப்பிடமாகக் கொண்ட கதிரவேலு ஆறுமுகம் மன்னரில் அகால மரணமடைந்தார். இவர் சரஸ்வதியின் அன்பு கணவரும் கனரத்தினம் [சிவா ஸ்ரோஸ் Kayts] குணசிங்கம், பரமேஸ்வரன், மங்களகுமாரி, இரத்தினகுமாரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு தந்தையுமாவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும். (966)

## மரண அறிவித்தல்
## டாக்டர் அப்புக்குட்டி செல்லப்பா

கொல்லன்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த Dr. அப்புக்குட்டி செல்லப்பா தனது 95-வது வயதில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி தங்கமுத்துவின் அன்புக்கணவரும், திருமதி சிவசோதி, பரம்சோதி, மலர்சோதி. செல்வி ஜெகசோதி(ஆசிரியை J/மகாஜெனக் கல்லூரி), திரு. இராமச்சந்திரன் (நைஜீரியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், இளைப்பாறிய Dr. நாகமணி (இளைப்பாறிய உதவி நில அளவை அத்தியட்சகர்), சிவகுருநாதர் (இளைப்பாறிய தபால் அதிபர்), தில்லையம்பலம், திருமதி கிருபா (நைஜீரியா) ஆகியோரின் மாமனுரும், Dr. பாலகிருஷ்ணன் (பருத்தித்துறை) இன் சிறிய தகப்பனும், நிர்மலகாந்தன் (U. S. A.), விஜயகாந்தன் (Australia), தயாளகாந்தன் (U. K.), திருமதி கதிர்காமநாதன் (U. S. A.), திருமதி யசோதா சிறிஸ்கந்தன், வாசுகி, அனுஷியா, தேவகி. சுகந்தினி, உமேஷ், நிரோஷ் ஆகியோரின் பாட்டனுரும், ருஜீவ், சஞ்ஜீவ், ஜனனி, லக்ஷ்மன், இருஷிக்கேஷ், கஜன் ஆகியோரின் பூட்டனுரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-12-84 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

'சாதி வாசா', கொல்லன்கலட்டி.
தெல்லிப்பளை. 969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

வருட மாததொடர் நவமி தலைவனை அழிக்கும்; வருட மாதமுடிவுநவமி மக்களை அழிக்கும்; வருட மாத நவமிதொடரும் முடிவும்- நல்ல; வருடமாதமாயிராதே மக்களே- கேள்மின்.

என்ன புரியவில்லையா?

1800-ம் ஆண்டளவில் ஆண்ட பாண்டிய மன்னனின் மறைவுக்கு ஒரு எடுத்துக்காட்டாக ஆஸ்தான சோதிடரின் ஒரு நோக்கையே மேலே படித்தீர்கள்.

1-12-1984-ன் கூட்டுத்தொகை 26. அதாவது எட்டு. மார்கழிமாதம் முதலாம் திகதி அதாவது தமிழுக்கு முதலாம் திகதி, இம்மாதம் பதினுறும் திகதி பிறக்கிறது. அன்று நவமியா?

— ஊடுருவி

## விஷவாயு விபத்து:
# இதுவரை 2,500!

புதுடில்லி, டிச. 7

மத்திய பிரதேஷ் போபால் நகரில் இடம்பெற்ற விஷவாயுக் கசிவில் பலியானவர்களின் எண்ணிக்கை 2,500 வரை அதிகரித்துள்ளது.

இக் கொடிய விபத்திஞல் அந் நகரம் முழுவதும் சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது இந் நகரில் ஒரே புகைமூட்டமாக இருக்கின்றது. இப்புகை, பலியானவர்களின் சடலங்களைத் தகனஞ் செய்வதால் கிளம்பிக்கொண்டிருக்கின்றது.

'யூனியன் கார்பைட்' பல்தேசியக் கம்பனியின் ஒரு கிளையான போபால் தொழிற்சாலையிலிருந்தே இவ் விபத்து ஏற்பட்டது. இக் கம்பனிமீது இந்திய அரசு வழக்குத் தொடரவுள்ளது. போபால் தொழிற்சாலையின் முகாமையாளர்கள் உட்பட ஆறுபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் தீவிரயாக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கமும், மத்திய பிரதேஷ் மாநில அரசும் இந்தக் கம்பனியிடமிருந்து நஷ்டஈடு கோரியுள்ளன. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் இதன் மீது நஷ்ட ஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்யும் படி அரசு கேட்டுள்ளது

அமெரிக்க அதிபர் றீகன் பிரிட்டிஷ் மகாராணியார், பாப்பரசர், பிரிட்டிஷ்பிரதமர் சீன அதிபர், இலங்கை ஜனதிபதி உட்பட பல உலகத் தலைவர்கள் இந்திய அரசுக்கு இவ் விபத்து மரணங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திருமதி. காந்தியின் மறைவுச்குப் பின்னர் கூடுதலான உலகத்தலைவர்கள் இம் மரணங்களுக்கே இந்தியாவில் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில நாட்களாக பெருவாரியான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா. மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இரு தம்பதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 60 பேர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

தொண்டமாஞற்றுப் பகுதியில் உள்ள வீடுகளில் திடீர்ச் சோதனை மேற்கொண்ட இராணுவத்தினர், 60 ஆண்களைக் கைது செய்து விசாரணைக்குக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இச் சோதனை இடம் பெற்றது.

## உரும்பராய் சந்தியில்..

(யாழ்ப்பாணம்)

உரும்பராய்ச் சந்தியில் வைத்து, சைக்கிள்களில் வந்த பலர் தாக்கப்பட்டதுடன் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

லொறியொன்றும் அடித்து நொறுககப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)


**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
ராஜராஜசோழன்
(கலர்)

**வின்ஸர்** (யாழ்)
10-30 மட்டும்
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மஞேரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணுநிதியின்
பூமாலை

**றீகல் மினி**
10-00, 12-30
[12-30 மணிக்காட்சி 2 மணிக்கு முடிந்துவிடும்]
Bruce K. L LEE...
BRUCE LEE FIGHTS BACK FROM THE GRAVE
[புறூஸ் லீ மீண்டும் தாக்குகிறுர்-]
ஜேர்மன் மொழியில் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டது,

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
துணிவே துணை


## தைப்பொங்கல் தினத்தில்
# தமிழீழப் பிரகடனம்: 'ரெலோ' மறுப்பு

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் னத்தன்று தமிழீழப் பிரகடனத்தைத் தமது இயக்கம் செய்யப்போவதாகத் தமிழசத்தில் ரெலோ செயலாளர் சிறிசபாரத்தினம் தெரிவித்ததாக இலங்கை அரசு வெளியிட்ட செய்தி மறுக்கப்பட்டுள்ளது.

'ரெலோ' என்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் உத்தியோகபூர்வமான ஏடான 'எழுச்சி'யில் தை 14-ல் தமிழ் ஈழப் பிரகடனமா?' என்ற தலைப்பிட்டு முதல் பக்கத்தில் வெளியான செய்தியில் இந்த மறுப்பு வெளியிடடபட்டுள்ளது.

அச்செய்தி வருமாறு:-

1985ஆம் ஆண்டு தை மாதம் 14-ம் திகதி தமிழீழப் பிரகடனம்செய்யப்படுமென்று ரெலோவின் செயலதிபர் திரு. சிறி சபாரட்ணம் அவர்கள் இந்தியாவில் பேட்டியொன்றில் தெரிவித்ததாகக் கூறும் உண்மைக்குப் புறம்பான செய்தி கடந்த சில தினங்களாக சிறீலங்கா அரசிஞல் பரப்பப்பட்டு வருகின்றது. எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், இயங்கிவரும் பிற்போசகு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் ஆரம்பித்துள்ள கூட்டுச்சதியே இதுவெனவும் எமது செயலதிபர் எந்தவொரு பேட்டியிலும் தை மாதம் 14-ந் திகதி தமிழீழப் பிரகடனம் என்ற கருததைத் தெரிவிக்கவில்லையெனவும் தமிழீழ மக்கள் அனைவருக்கும் உறுதியாகக் கூறிவைக்கிறேம்.

''கடந்த 28-11-84 அன்று ஸ்ரீலங்காரூபவாஹினிஒளிபரப்பில் ரெலோ இராணுவம் பயிற்சி பெற்றதாகக் காட்டப்பட்ட முகாம்கள் எதுவும் அதில் அறிவிக்கப்பட்ட இந்தியாவில் இல்லையெனவும் அவை அனைத்தும் தமிழீழத்தின் காடுகளிலேயே அமைக்கப்பட்டவையே எனவும் ரெலோ தமிழீழ மச்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றது என்பதாகும்.

## கட்டாய லீவில் செல்ல பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும்தமிழ் உயரதிகாரி லைக்கட்டாய லீவில் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு சுங்கஇலாகா ஆகியவற்றில் கடமையாற்றும் பொறுப்புவாய்ந்த தமிழ் அதிகாரிகளும் கட்டாய லீவில் அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. (மா)


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)


## இன்று ஜி ஸி. ஈ.பரீட்சை:
# பாதிப்பு ஏற்படாது நடவடிக்கை!

யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களில் இன்று ஆரம்பமாகும் ஜி. சி. ஈ சாதாரண பரீட்சைக்குத் தோற்றும், மாணவர்களுக்கும், அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து எவ்வித பாதிப்பும் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களுக்கும், பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும், போக்குவரத்தின் போதும், எவ்வித பாதிப்பும், ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜி. சி. ஈ. பரீட்சையில், சில பாடங்கள், ஊரடங்கு நேரமான பிற்பகல் 4 மணிக்கு பின்னரும் இருப்பதாக, யாழ். பிரஜைகள் குழுவினர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை சந்தித்த போது அவரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். இதுபற்றி

[4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## பாவிக்க முடியாத வாகனங்கள்:
# அரச அதிபருக்கு அறிவிக்க வேண்டும்!

(சுண்டுக்குளி)

1985ம் ஆண்டுக்கு பாவிக்க முடியாத தங்கள் மோட்டார் வ கனங்களைப் பற்றி விண்ணப்பிடவர்கள் இம் மாதம் 31-12-84 க்கு முன்பு யாழ் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தமது விண்ணப்பத்துடன் பின்வருமாறு பணத்தைச் செலுத்திஞல் மட்டுமே அவர்களது விண்ணப்பம் ஏற்றுக் ஏற்றுக்கொள்ளப்படும். இதன் பிரகாரம் மோட்டார் சைக்கிள் மூன்று சில்லு வண்டிக்கு 25 ரூபாவும், லொறி மோட்டார் வாகனங்சளுக்கு 100 ரூபாவும் ஏனைய பிற வாகனங்களுக்கு 50 ரூபா வீதமும் வரி செலுத்தவேண்டும். அத்துடன் விண்ணப்பதாரரின் வாகனங்கள் எந்த உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் நிறுத்தப்பட்டுள்ள தென்பதையும் அறிவிக்கவேண்டும்.

# உதவி அத்தியட்சகர் தற்காலிக வேலை நீக்கம்!
## ஜீப் கடத்தலின் எதிரொலி

(முல்லைத்தீவு)

முல்லைததீவு நில அளவை உதவி அத்தியட்சகர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் ஏழாம் திகதி இவரது உத்தியோகபூர்வமான ஜீப், இயக்கத்தின் பேரில் புளியம்பொக்கணையில் வைத்து துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது இதனைத் தொடர்ந்தே மேற்படி அதிகாரி தற்காலிகமாக வேலை

(4-ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

# இன்றைய யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

சட்டத்தை விட அன்பிற்கே முதலிடம் கொடுங்கள். அன்பின் அடிப்படையில் சட்டங்கள் அமைய வேண்டும்.

— இந்திரா காந்தி

# நமது நோக்கு

## புது வீடு

காரிருள் அடர்ந்திருந்தால் அது சூரியோதயம் கிட்டிநிற்கிறதென்பார்கள். மணிக்கூடில்லாக் காலத்தில் பிறந்த உள்ளுணர்வு இது.

உடைந்த எரிந்த சமுதாயத்தில் வாழும் நாம், இன்றைய அழிவில் உயர் பிழைக்க முடியுமானால் வீட்டைத்திருத்துவது முடியாத காரியம். எந்த உரிமையும் ஒரு இனத்துக்கு பிரத்தியேகமானதல்ல. புதிய வாழ்க்கைமுறை பிறக்க வேண்டும்.

''சிறுகக் கட்டி பெருக வாழ்க'' என்ற குறிக்கோளைச் சிரித்துக் கேலிசெய்ததனுல் இன்று அதற்குரிய தண்டனைக்குள்ளாகின்றோம்.

குடிக்க கஞ்சிக்கு வழியில்லாதவர், வீடு வாசல் இல்லாதவர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர் கொல்லப்படுவார்களானுல் அந்த அழிவுக்கு வசதிபடைத்த சமூகமே பொறுப்பு.

சித்தாந்தம் வலதோ இடதோ என்று தர்க்கித்து காலம் கழிப்பது அனுவசியம்.

வேற்று நாட்டில் படையெடுத்து மக்களைக் கொன்று பொன்னையும் மணியையும் கொள்ளையடித்து உள்நாட்டுப் பிரஜைகளை துன்புறுத்திய மன்னர் ஆட்சி அகற்றப்பட்டது.

மக்கள் ஆட்சி என்ற பேரில் இன்று என்ன நடக்கிறது? மக்களின் ஆட்சி மக்களையே கொன்றுகுவிக்கிறது ஏன்? இன வேறுபாடுதான் காரணமா? ஒழுங்காக வாழாது திட்டமான எண்ணம் இல்லாது சிங்காரத்திலும் ஆடம்பரத்திலும் ஆசைகொண்டு சீரழிந்து போகும் கழகம், அது எந்த இனமானுலும், இன்றைய கடடத்தை தவிர்க்க முடியாது.

உயருக்கு-எந்த உயிருக்கு யார் பாதுகாப்பளிப்பது, வீடுவிட்டு வெளியேறினுல் என்ன நடக்கும், பல வசதிகளும் படைத்த பட்டணம் - ஏன் கிராமத்தாலும் பாதுகாப்பாக வாழ வழி கண்டிருக்கிறதா?

ஒரு பலமான அத்திவாரம் கொண்ட வீட்டுக்கு உரித்தான மக்கள் வீட்டை பழுதுபோக விட்டதுமட்டுமல்ல; அத்திவாரத்தையும் ஈடாடவிட்டு விட்டோமே. உயிரைத் தியாகம் செய்யும் எமது இளைஞர் இதனை உணரவேண்டுமென்பது நிச்சயம்.

கண்ணை மூடிக்கொண்டு செலவழிக்கும் பண்பு எங்கிருந்து வந்தது? எனவே நெருக்கடி வராமல் என்ன செய்யும்? குடும்பம் சிதைய, பொன்னுக்கும் மணிக்கும் பேராசை திரைகடல் ஓடத் தூண்ட பிறந்த பொன் நாட்டில் மிஞ்சி இருக்க வேண்டிய சக்கையே விபரீதமான தொழில்தேடி பிறந்த மண்ணைவிட்டு 'பாதுகாப்பு' என்ற காரணம் காட்டித் தப்பியோட முயல்கின்றது.

இங்கு பிறந்து இங்கு உயிர் நீக்கவேண்டுமென்ற கருத்துக்கொண்டவர்கள் நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வமான சிக்கனம் என்ற சிறந்த வாழ்க்கை முறையில் புதுவீடு அமைக்க அத்திவாரமிடவேண்டும்.

இது வறுமையில் பிறந்த பண்பாயிருக்கலாம். ஆனுல் செல்வத்தில் தனது சமூகத்துக்கு உதவ வழி காட்டுவதும் அதுவே. வாய்க்கால் வரவும் ஆற்று (மகாவலி)ப் போக்கும் மதிகெட்ட வாழ்வுக்கு அடையாளம் என்பதை இன்றைய மக்கள் ஆட்சி புகட்டுகின்றது.

### இன்று தேவன் யாழ்ப்பாணம் 2வது நினைவு தினம்

ஆசிரியப் பணிபுரிந்தே இவ் வையத்தே
அளப்பரிய மாணவரை வளர்த்த மேலோன்
பேசுமுயர் தமிழ்ப் பற்ருல் கலையார்வத்தால்
பெரும்பொழுதைப் பொதுப்பணிக்கேவைத்தநல்லோன்

★

நாடகங்கள் எழுதி நெறிப்படுத்தல் செய்தோன்
நகைச் சுவைசேர் சொற்பொழிவால்மகிழச்செய்தோன்
மேடைகளில் ஆங்கிலத்தைத் தமிழில் நல்கும்
வித்தையிலே அறிஞரெலாம் வியக்கவாழ்ந்தோன்

★

வளமிகுந்த சொல்லாளன் வஞ்சம் இல்லான்
மனதார எவரையுமே மதிக்கும் பண்பன்
பழகுற்கு மிகநல்லோன் தேவன் என்ற
பண்பாளன் நம் நெஞ்சில் வாழ்கின்ருனே.

★

பதவி பட்டம் விரும்பாத கரும்பு நெஞ்சம்
பண்பினிலே தோய்ந்திட்ட அன்பு வார்த்தை
உதவுதற்கே முன்னிற்கும் உயர்ந்த வாழ்வு
உண்டென்ருல் தேவன் என உரைப் பார்தேர்ந்தோர்.

—கூடலூர் சிவம்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

# வெளியேறுமாறு மக்களுக்கு பணிப்பு

[வண்ணார்பண்ணை]

குருநகர் இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் உள்ள வீடுகளில் வசிக்கும் மக்களை வீட்டை விட்டு வெளியேறுமாறு இராணுத்தினர் பணித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது விடயமாக பயப்பீதி கொண்ட இப்பகுதி மக்கள் தாம் வசிப்பதற்கு வேறுஇடம் கொடுக்குமாறும், அல்லது தமது வீடுகளில் வசிப்பதற்கு வசதி செய்து தருமாறும் யாழ். மாவட்ட அரச அதிபரைக் கேட்டுள்ளனர்.

முகாமுக்கு அருகில் உள்ள நூற்றுக் கணக்கான மக்கள் வியாழக்கிழமை அரச அதிபருக்கு முறையிடுவதற்காக அரசாங்கச் செயலகமுன் காத்து நின்றனர்.

## தமிழக...

(1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

டில் முடிவுசெய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடற்படை அதிகாரி கமாண்டோர் கிருஷ்ணசாமி உடனடியாக அந்த கடற்படைக் கப்பலை அனுப்பிவைத்தார்.

இனிமேல் இப்பகுதியில் கடற்படையினரே தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருப்பார்கள். [சூ]

## கடந்த..

(1-ம் பக்க4ம்கலத்தொடர்ச்சி

பர்களைப்பற்றிப் பொதுமக்களும் தகவல்களைப் பொலிசாருக்கு வழங்கிவருகின்றனராம். இத்துடன் இவ்வாலிபர்களுக்கு தங்குமிடங்களை வழங்கியோரும் தற்போது அவ்வாறு செய்யப் பின்வாங்குகின்றனராம்.

வேறு சில இடங்களில் வீடுகள், அறைகளில் தமிழ் வாலிபர்களுக்கு இடமளிக்க மறுப்புத் தெரிவிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. (கி)

## வெளிவாரி...

(1ம் பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாணவர்கள் தற்போதைய சூழ்நிலையில் பேராதனை, களனி பல்கலைக் கழகங்களில் சென்று தாம் பரீட்சை எழுத முடியாது என்றும் இதனுல் இப்பரீட்சையை பிறிதொரு திகதிக்கு பிற்போட்டு யாழ்ப்பாணத்திலேயே நடத்துமாறும் கோரி பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை உதவிப் பதிவாளருக்கு அவசர தந்தியொன்றை அனுப்பியுள்ளனர்.

இப்பாணை... பெரும்பாலு... பரீட்சைக்குதோற்றமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது.

## கிராமப்புற..

(1ம் பக்கம்2ம் கலத் தொடர்ச்சி)

என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

இந்த இடத்தில் வைத்து பிரயாணிகளை இறக்கிவிட்டு, மற்றுமொரு பஸ்ஸையும் ஆயுதப் படையினர் நேற்று எடுத்துச் சென்றனர்.

இதனையடுத்து கிராமப்புற பஸ் சேவைகளை கிளிநொச்சி டிப்போ ரத்துச்செய்துள்ளது.

## தவியதந்தி ட்சகர்...

(3ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் இருபத்து ஆறு வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதிப்பு ஏற்படாது ..

(3ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

கூடிய கவனம் எடுப்பதாக, தெரிவிக்கப்பட்டது

யாழ். கல்விப் பணிப்பாளரு, இதுபற்றி கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். இவ்விடயமாக இன்று முடிவு தெரிவிக்கப்படும் எனக் கூறப்படுகிறது

பரீட்சை நிலையங்களுக்கு செல்லும், மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், போக்குவரத்து வசதிக்காக விசேட பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இ. போ. சபையுடனும், கல்விப் பகுதியினர் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (கி)

## உணவு...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

விசேஷ அனுமதிகள் வழங்கப் பட்டுவிட்டன.

வெளி மாவட்டங்களிலிருந்து நெல், அரிசி, மரக்கறி தேங்காய் போன்றவை கொண்டுவரவிருக்கும் தனியார் வாகனங்களுக்கும் தற்காலிக அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய தேவைகளுக்கான வாகன அனுமதிப் பத்திரம் தேவையானோர் அவ்வப்பகுதி உதவி அரச அதிபரின் சிபார்சுடன் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு சி. பற்குணத்தை அணுகுமாறு கேட்கப்படுகின்றனர்.

யாழ். செயலகத்திலுள்ள உணவுக் கட்டுப்பாட்டு அலுவலகம் விடுமுறை நாட்களிலும் செயல்படுவதற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நீர்கொழும்பு...

(1ம்பக்கம் 2கலத்தொடர்ச்சி)

சோதனை நடத்தினர். அப்போது அங்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த அறுபது வியாபாரிகள் தங்கியிருப்பது தெரியவந்தது.

இந்த வியாபாரிகள் தாயகம் திரும்ப கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திருந்தனர். ஆனுல் அவர்களின் விமானம் தாமதித்ததால் அவ் விமானச்சேவை அவர்களை அந்த ஹோட்டலில் தங்க வைத்திருந்தது'

இந்த விபரங்கள் பொலிசாருக்குத் தெரியப்படுத்தப் பட்டதையடுத்து அந்த இந்திய வியாபாரிகளுக்கும், 'புளூலகூன்' ஹோட்டலுக்கும் ஏற்படவிருந்த ஆபத்து நீங்கியது.

இதேவேளை நீர்கொழும்பு, புத்தளப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது இப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டிருப்பதையடுத்தே நிலைமை கட்டுக்குள் இருக்கின்றது.

## அமெரிக்க...

(1-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய பிரதேச போபால் விஷவாயுத் தொழிற்சாலையின் தலைவரும், நிர்வாக இயக்குநரும், பொது முகாமையாளரும் மற்றும் ஐந்து உயர் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகத் திரு அன்டசன் இந்தியா வநதிருந்தார்

இவர் மீதும், கம்பனி மீதும் 7 வழக்குகள் தாக்கல்செய்யப் படவுள்ளன. வழக்குகள் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு ஆயுட்காலத்தண்டனை கிடைக்கலாம். (சூ)

## டீசல் பெறுவதற்கு அரச அதிபர் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான டீசல் எண்ணெயைப் புகையிரதம் மூலம் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். [மா]

## வாகன...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

சாங்க அதிபர் நாளைக் காலை 9 மணிககு செயலகத்தில்கூட்டவுள்ளார்

இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட சகல உதவிஅரசாங்க அதிபர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பளையில்...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி]

வில் காணப்பட்டது. இவர்கள் வீடுகளில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதனுல் இப் பகுதியில் பெரும் பதட்டநிலை காணப்பட்டது. கொடிகாமம் சந்தை உடனடியாக கலைந்துசென்றதாகவும், கொடிகாமம், சாவகச்சேரி பகுதியில் கடைகள் பூட்டப்பட்டு பூரணஅமைதி நிலவியதாகவும் கூறப்படுகிறது.

## ஆயிரம்...

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

யிலேயே யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்றமுன்தினம் காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி பிரயாணிகளை கிளிநொச்சியில் இறக்கிவிட்டுத் திருப்பிவிட்டது

இதனுல் அதில்வந்த1000க்கு மேற்பட்ட பிரயாணிகள் (பெண்கள் உட்பட) கிளிநொச்சியில் பாதுகாப்பான இடங்களில் வைத்து உபசரிக்கப்பட்டனர்.

இவர்களை ப. நோ. கூ. சங்க லொறிகளும், இ. போ. ச. சபை பஸ்களும் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்துசேர்த்தன.

சில பஸ்கள் கொடிகாமத்தில் பல மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும கூறப்படுகிறது (மா)

## வடபகுதி...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

டீசலை வைத்து பஸ் சேவையைச் சமாளித்ததாகவும், இனி பஸ்சேவையை நடாத்துவது பெரும் சங்கடமென்றும் இ. போ. ச. சேவை வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய பாதுகாப்பு சட்டவிதிகளினுல், சீர்குலைந்து போயுள்ள வடபகுதி பிரயாணக் கஷ்டத்தினுல் திணறிக்கொண்டிருக்கும் மக்களுக்கு, இந்த டீசல் பிரச்னை பெரும் பிரச்னையை உருவாக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ளபெற்ரோலியம் கூட்டுத்தாபனக் கிளையில் டீசல் இருந்த போதிலும் அதனை வழங்குவதற்கு மேலிடத்து உத்தரவுகள் இல்லாது எதுவும் செய்ய முடியாதெனத் தெரிவித்து விட்டது'

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சுந்தரராஜ்

62/5 செம்மணி ரோட் நல்லூரைச் சேர்ந்த ஆறுமுக சுந்தரராஜ் 4-12-84ல் மன்னுரில் அகால மரணமானுர் இவர் அரியமலரின் அன்புக் கணவரும், சுதாகர், பபி, விஜயன், நிதி, மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுவின் [மோகன் தியேட்டர் உயிலங்குளம்] மருமகனுமாவார். நல்லடக்கம் மன்னுரில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை, உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும். [964]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org